**மாதிரி வினாத்தாள்**

சி++ மொழியின் வழி பொருள் நோக்கு நிரலாக்க கருத்துக்கள் - பகுதி I

12th Standard

**கணிப்பொறி இயல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:00:00 Hrs

Total Marks : 30

## பகுதி - அ

10 x 1 = 10

1) வேறுபட்ட செய்திகளுக்கு மாறுபட்டுச் செயல்படும் ஒரு பொருளின் திறனே

(a) உறைபொதியாக்கம் (b) பல்லுருவாக்கம் (c) செயல்கூறு (d) வரையறைக்கூறு

2) நடப்புலகப் பொருள்களைக் கணிப்பொறி நிரலில் எடுத்தாள _____________ கருத்துரு உதவுகிறது.

(a) பொருள் (b) பண்பு (c) தரவு (d) செயல்

3) பலதரப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் ஒரு கருவி எது?

(a) நிரல் (b) தரவு (c) கணிப்பொறி (d) மாறி

4) ஏற்கனவே உள்ள இனக்குழுவிலிருந்து புதிய இனக்குழுவை உருவாக்கும் முறை

(a) மரபுரிமம் (b) பொருள் (c) உறைபொதியாக்கம் (d) பல்லுருவாக்கம்

5) கணிப்பொறியில் சிக்கல்களுக்கான தீர்வுகள் எந்த வடிவில் உள்ளன?

(a) மென்பொருள், வன்பொருள் (b) பயன்பாடு (c) கணிப்பொறிநிரல் பயன்பாட்டு மென்பொருள் (d) கணிப்பொறி நிரல்

6) கணிப்பொறி என்பது பலதரப்பட்ட _______ க்குத் தீர்வு காணும் ஒருகருவியாகும் .

(a) நிரல் (b) பயன்பாடு (c) மென்பொருள் (d) சிக்கல்கள்

7) உள்ளீடாகத் தரப்படும் தரவுக்கூறுகளின் மீது எது செயல்படுகிறது ?

(a) பயன்பாடு மென்பொருள் (b) கணிப்பொறி நிரல் (c) கணிப்பொறி (d) இவை அனைத்தும்

8) தரவுக் கூறுகளின் மீது நிகழ்த்தப்பட்ட வேண்டிய செயல்பாடுகளைக் கணிப்பொறிக்கு அறிவுறுத்த எவை பயன்பட்டன ?

(a) உள்ளீட்டுக் கூற்றுகள் (b) வெளியீட்டு கூற்றுகள் (c) மாறிகள் (d) கட்டுப்பாட்டுக் கூற்றுகள்

9) பின்வருவனவற்றுள் எது பொருள் நோக்கு நிரலாக்க மொழி ?

(a) BASIC (b) C++ (c) COBOL (d) Visual basic

10) தொடக்ககால நிரலாக்க மொழிகளில் உள்ளீட்டு வெளியீட்டுத் தரவுக் கூறுகள் எவ்வாறு கையாளப்பட்டன ?

(a) செயற்குறிகளாக (b) கோவைகளாக (c) மாறிகளாக (d) மாறிலிகளாக

## பகுதி - ஆ

5 x 2 = 10

11) மரபுரிமம் என்றால் என்ன?

12) பொருள் வரையறு?

13) பொருள் நோக்கு நிரலாக்கத்தின் பலன்கள் யாவை?

14) பொருள்நோக்கு நிரலாக்கம் என்றால் என்ன?

15) நிலை மற்றும் பண்பியல்பை வரையறு.

## பகுதி - இ

2 x 5 = 10

16) பொருள்நோக்கு நிரலாக்கத்தின் பலன்களைக் கூறுக.

17) பொருள் என்பதன் உட்கருத்து என்ன?

*****************************************

QB365 QUESTION BANK
https://www.qb365.in